## மதியின் நிலவு

*ஸ்ரீ.உ.வே. சோகத்தூர் ராமாநுஜாசார்யர்*

आविष्णोरभिवन्द्यादावाचार्याणां परम्पराम् । वेदाचार्यान् स्वतातांश्च पराङ्कुशसदाह्वयान् ॥

वात्स्यरामानुजेनाद्य तैत्तिरीयमधीयता । चक्रवर्त्यार्यसूरीणां पदयोः अभिवाद्यते ॥

शताभिषेकसन्दर्भे बुधानां चक्रवर्तिनाम् । वेदान्तदेशिकानां मे वाचिकं क्रियतेऽर्चनम् ॥

बुधचक्रवर्तिकृतसूक्तिगुम्फसत्पठितृप्रबुद्धजनतुष्टिलिप्सया ।
यतने ममात्र गुरुसूक्तिवैभवप्रथनेऽनुगृह्य दयतां नृकेसरी ॥

श्रीमद्वेदमार्गेत्यादि विशेषणपञ्चकविशिष्டராய் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் பெருக்காரணை சக்ரவர்த்யாசார்ய ஸ்வாமியின் ஶதாபிஷேக மஹோத்ஸவத்தில் அவரிடம் வேதாந்த காலக்ஷேபம் பண்ணும் வாய்ப்பு கிடைத்ததைப் பெரும் பாக்கியமாகக் கருதி, ஶிஷ்யக்ருத்யமாகப் 'போற்றி உகப்பதும், புத்தியில் கொள்வதும், பொங்கு புகழ் சாற்றி வளர்ப்பதும்' விஹிதமாதலால் அதில் யதாஶக்தி முயற்சிக்கிறேன். லக்ஷ்மீந்ருஸிம்ஹன் தலைக்கட்டித் தருவானாக.

'இன்று நமக்கு இரவு, ஆதலின் இம்மதியின் நிலவே அன்றி அடிக்கடி ஆரிருள் தீர்க்க அடி உளதே' என்று ஸ்வாமி ஸ்ரீதேஶிகன் கங்கிருளால் விடியாத உலகுக்கெல்லாம் கைவிளக்காமெனக் காட்டும் ஶாஸ்த்ரங்களை நமக்கு அறிவிக்கும் ஆசிரியர்கள் பால் தலையல்லால் கைம்மாறிலோம்.

இக்கட்டுரையின் தலைப்பு நம் ஸ்ரீஸ்வாமியின் ஸ்ரீபாஷ்யத்துக்கு உரையான நூலையும் குறிக்கும். அன்னாரின் மேதாவிலாஸத்தைப் பற்றி நன்கு அறியப் பல க்ரந்தங்களை அவர் இயற்றி இருப்பினும், அவற்றில் श्रीभाष्यभावचन्द्रिकाவின் வாயிலாக இங்கு விளக்க முற்படுகிறேன்.

ஶாஸ்த்ரக்ரந்தங்களை கம்ப்யூட்டர் வாயிலாக சேகரித்து, பலவித ஆராய்ச்சி செய்திட உதவும் வகையில் அமைக்கக் கருதி அடியேன் சில காலமாக முயன்று கொண்டிருக்கிறேன். ஸ்ரீபாஷ்யத்தைப் பற்றி உள்ள சுமார் 10-15 க்ரந்தங்கள் கம்ப்யூட்டரில் சேர்க்கப் பட்டுள்ளன. அவற்றில் அதிகரணஸாராவளீ மட்டும் ஆங்காங்கு கோடிட்டுக் காட்டப் பட்டாலும், எதிலும் அருளிச்செயல் மற்றும் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்திலிருந்து மேற்கோள்களுடன் விஷயவிசாரம் செய்யப் படவில்லை. அவை நம் ஸம்ப்ரதாயத்துக்கு இன்றி அமையாதவை என்று சொல்லவும் வேண்டுமோ? இக்குறையைத் தீர்க்கும் வகையில் श्रीभाष्यभावचन्द्रिकाவில் அமைந்துள்ள சில எடுத்துக்காட்டுகளை இங்கு தருகிறேன்.

भावचन्द्रिकाவின் இரண்டாம் பாகத்தில் अक्षराधिकरणम् (1.3.11, पृ. 23), प्रमिताधिकरणम् (1.3.24, पृ. 45), देवताधिकरणम् (1.3.25, पृ. 46), अपशूद्राधिकरणम् (1.3.34, पृ. 69), आनुमानिकाधिकरणम् (1.4.1, पृ. 81-85), विलक्षणत्वाधिकरणम् (2.1.9, पृ. 177), कर्त्रधिकरणम् (2.3.39, पृ. 349), सप्तगत्यधिकरणम् (2.4.5, पृ. 367), सर्ववेदान्तप्रत्ययाधिकरणम् (3.3.1. पृ. 444), शरीरे भावाधिकरणम् (3.3.52, पृ. 522), तदधिगमाधिकरणम् (4.1.13, पृ. 598), आतिवाहिकाधिकरणम् (4.3.5, पृ. 632), सङ्कल्पाधिकरणम् (4.4.9, पृ. 651, 653) முதலிய இடங்களில் सारशास्त्रத்திலிருந்து ஸாரஸாரஜ்ஞர் ஸ்ரீபாஷ்யத்தின் அர்த்தத்தை தெளிவிக்கிறார். இவை செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித் தெளியாத மறை நிலங்கள் தெளிதலென தூப்புல் குலமணியே கூறுவர். இவற்றிலிருந்து ஆநுமாநிகாதிகரணத்தை மட்டும் இக்கட்டுரையில் விரித்துரைக்க விழைகிறேன்.

आनुमानिकाधिकरणத்தில் கடவல்லியில் ஓதப்பட்ட 'इन्द्रियेभ्यः परा ह्यर्थाः .... सा परा गतिः' என்ற

மந்த்ரங்களின் அர்த்தத்தை விளக்குங்கால் ஸூத்ரகாரர் 'शरीररूपकविन्यस्तगृहीतेः' என்று கூறியதை ஸ்ரீபாஷ்யகாரர் 'यानि येभ्यः वशीकार्यतायां प्रधानानि तान्युच्यन्ते इन्द्रियेभ्यः पराः इत्यादिना' என்று தொடங்கி ஜீவனைக் காட்டிலும் வஶீகரிக்கப்படவேண்டியவன் எம்பெருமான் என்பதை 'वशीकार्योपासननिर्वृत्त्युपाय-काष्ठाभूतः परमप्राप्यश्च स एव' என்று ஸாதித்தருளி அவனை வஶீகரிக்கும் உபாயமாக அவனைச் சரணமடைதலை 'तस्य च वशीकरणं तच्छरणागतिरेव । यथाह .... तमेव शरणं गच्छ इति' என்று வெளியிட்டார்.

இவ்விடத்தில் நம் ஸ்வாமி பகவானை அநீஶ்வரனான பத்தஜீவன் எப்படி வஶீகரிக்க முடியும்? அது முடியாமையாலன்றோ உபநிஷத்துக்களில் எங்கும் பகவானை வஶீகரிக்கும் வழி சொல்லப்படவில்லை என்று தோன்றும் சங்கைக்கு உத்தரமாக 'तस्य च वशीकरणं' என்கிற சூர்ணிகைக்கு அவதாரிகை இட்டார். பிறகு இந்த ஶரணாகதியை கீதாபாஷ்யத்தில் அங்கப்ரபத்தி விஷயமாகவும், சரணாகதி கத்யத்தில் ஸ்வதந்த்ரப்ரபத்தி விஷயமாகவும் பாஷ்யகாரர் தெளிவாக விவரித்துள்ளார் என்றும் ப்ரமாணங்களுடன் நிலை நிறுத்தி, பக்தி எப்படி எல்லா பாபங்களுக்கும் ப்ராயஶ்சித்தம் ஆகிறதோ அப்படியே ஶரணாகதியும் என்றும், ஐந்து அங்கங்களுடன் கூடிய ஆத்மநிக்ஷேபமாகிற ந்யாஸம் தான் ஶரணாகதி எனப்படுகிறது, இது உபநிஷத்துக்களில் 'ओमित्यात्मानं युञ्जीत', 'सन्धां च यँ सन्दधे ब्रह्मणैषः' முதலிய இடங்களில் தெளிவு, 'हविर्गृहीत्वाऽऽत्मरूपं वसुरण्येति मन्त्रतः' முதலியவற்றில் இதின் உபாயத்வமும் விளங்குகிறது என்று ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் சொன்னபடி ஸித்தாந்த ஸங்க்ரஹம் பண்ணினார்.

பிறகு இதின் மேல் பிறக்கும் ஆக்ஷேபங்களையும் அதற்குப் பரிஹாரங்களையும் விளக்குகிறார்.

1. பக்தியின் ஸ்தானத்தில் ப்ரபத்தி விதிக்கப்பட்டிருப்பதால் பக்தி போக்காத ப்ராரப்தகர்மாவை ப்ரபத்தி எப்படி போக்கும்? ஸஞ்சிதகர்மமாத்ரநிவர்தகமாக வன்றோ பக்தி விதிக்கப்பட்டுள்ளது? அதாவது, 'येन येनेष्टहेतुना' என்ற வசனத்தின்படி ப்ராரப்தநிவ்ருத்திக்காகவும் பக்தி செய்யலாமாகிலன்றோ அது துஷ்கரமான அதிகாரிக்கு அதற்காக ப்ரபத்தி பண்ணமுடியும் என்று. அதாவது, முயற்கொம்பு, ஜீவன் மற்றும் பகவத் விபூதிகளுக்கு அழிவு முதலிய அப்ரஸித்த பலங்கள் ஏற்கப்பட்டால் அதற்குக் காரணமான உபாயமும் அப்ரஸித்தமாகும் அன்றோ? அப்போது அதன் ஸ்தானத்தில் ப்ரபத்தி பொருந்தாது. எங்கு உபாயம் ப்ரஸித்தமோ மற்றும் எவ்வளவு பலத்தைக் கொடுக்குமோ அங்கு அவ்வளவு பலத்துக்காக மட்டுமல்லவோ ப்ரபத்தி செய்யலாவது?

2. இப்படியே யாகமும் ஸ்வர்கத்தை மட்டும் உண்டாக்குமே தவிர மோக்ஷத்தைக் கொடுக்க மாட்டாது. ஆக, மோக்ஷத்தை விரும்புபவன் மோக்ஷத்தை உண்டாக்கும் யாகத்தின் ஸ்தானத்தில் பகவானை நிறுத்தி, யாகமாகிற உபாயாந்தர ஸ்தானத்தில் தேவரீர் நின்று அடியேனை மோக்ஷமாகிற பலத்தை அடைவித்துக் காக்கவும் என்று ப்ரார்த்திக்க ஒண்ணாது. 'उपायभक्तिः प्रारब्धव्यतिरिक्ताघनाशिनी । साध्यभक्तिस्तु सा हन्त्री प्रारब्धस्यापि भूयसी ॥' என்கிற வசனத்தினால் ப்ரபத்திக்கு ப்ராரப்தத்தையும் போக்கும் ஶக்தியை ஒப்புக்கொண்டாலோ வெனில், அப்போது ப்ரபத்திக்கு பக்திஸ்தானாபந்நத்வம் - பக்தியோகத்தின் இடத்தில் இருந்து கொண்டு அதன் பலனைக் கொடுத்தல் - போய்விடும். ப்ரபத்தி அநுஷ்டிக்கும் போது தான் விரும்பும் பலத்திற்கு ஸாதனமான வேறு உபாயத்தை எதிர்பாராது ரக்ஷிக்கவேணுமென்கிற பரந்யாஸமே ஸித்திக்காது (பக்திக்குத் தான் விரும்பும் ப்ராரப்தகர்மாவைப் போக்குவதில் ஶக்தியற்றிருப்பதால்). 'स्वाभिमतप्रारब्धनिवृत्तिरूपफलजनकं' என்று பக்தியைக் குறிக்க முடியாதாகையால் எப்படி பக்திஸ்தானத்தில் பகவானை நிறுத்த முடியும்? பக்தி, ப்ரபத்திகளுக்கு பலத்தில் வேற்றுமை இருப்பதால் ஶக்த, அஶக்த அதிகாரிகள் விஷயமாக அவற்றை நியமிக்கவும் முடியாதே.

3. இங்கு, அவதாரரஹஸ்யசிந்தனத்துடன் கூடிய பக்தியோகம் ப்ராரப்தத்தை யும் போக்கும் என்பதால் பக்தியும் ப்ராரப்தத்தைப் போக்குமென்பதில் ப்ரஸித்தி உண்டெனவும் ஒண்ணாது. அந்த பக்திக்கு

ஶரீரம் விட்டபொழுதுதான் மோக்ஷத்தை உண்டாக்கும் தன்மை 'त्यक्त्वा देहं पुनर्जन्म नैति मामेति सोऽर्जुन' என்ற வசநத்தால் தெரிகிறது. ஆக, க்ஷணாந்தர, திவஸாந்தரம் முதலியவற்றில் மோக்ஷம் கோரினால் அதுவும் ப்ரபத்தியை பக்திஸ்தானாபன்னமென்னப் போதாது. தவிர, எல்லோருக்கும் அது (அவதாரரஹஸ்யசிந்தனத்துடன் கூடிய பக்தியோகம்) விதிக்கப்படவில்லை.

4. இன்னொரு கேள்வி - பகவானை உபாயாந்தரஸ்தாநத்தில் நிறுத்துகையாவது, பக்தி எதெதற்கு ப்ராயஶ்சித்தமோ அததன் ஸ்தானத்தில் நிறுத்துகை. ஆக, ஸஞ்சிதகர்ம விஷயத்தில் பக்திஸ்தான நிவேஶம். ப்ராரப்த விஷயத்திலோ வெனில், அதற்கு விஹிதமான உபாயங்களின் ஸ்தானநிவேஶம். ப்ராரப்தத்துக்கும் ப்ராயஶ்சித்தம் விதிக்கப்பட்டிருக்கிறதென்று उपायविभागाधिकार த்தில் 'जन्मान्तरकृतं पापं .... जपहोमार्चनादिभिः' என்ற வசனத்துடன் ஸாதித்திருக்கிறார் என்னவும் ஒண்ணாது. அப்போது, ப்ரதிபதோக்தத்தாலேயே ஸஞ்சிதமும் போகலாமாதலால் ப்ரதிபதோக்தப்ராயஶ்சித்தஸ்தானத்தில் பகவானை நிறுத்தினாலே போதும், ஸஞ்சிதத்துக்கு பக்தி, ப்ராரப்தத்துக்கு ப்ரதிபதோக்தமெனப் பிரிக்க வேண்டியதில்லை.

5. மீண்டும் ஒரு கேள்வி - சரமஶ்லோகாதிகாரத்தில் ஸித்தௌஷதத்தை எடுத்துக்காட்டாக கூறும் போது ப்ரதிபதோக்தப்ராயஶ்சித்தஸ்தானத்தில் தான் பகவான் நிறுத்தப்படுகிறான், பக்தியின் ஸ்தானத்தில் அல்ல எனத் தோன்றுகிறதால் இது பொருந்தலாம். அங்கு பசு, புத்ர, அந்நம் முதலிய வெவ்வேறு பலன்களுக்காக முயற்சிப்பவர் அததற்கு விதித்த யாகம் முதலியவற்றின் ஸ்தானத்தில் பகவானை நிறுத்துவதுபோல் அந்தந்த நிவ்ருத்திக்காகவும் அததற்கு விதித்த ப்ராயஶ்சித்த ஸ்தானத்தில் நிறுத்தக் கூடுமிறே என்பதும் கூடாது. உபாயவிபாகாதிகாரத்தில் 'அத்வாரகமாக ப்ரபத்தியை மோக்ஷோபாயமாகப் பற்றுமவர்களுக்கு ஸர்வபல ஸாதனமான ப்ரபத்தி தானே பரபக்திஸ்தானத்திலே சோதிதையாகையாலே' என்று ஸகலபலத்தையும் ஸாதிக்கும் ப்ரபத்தியை பரபக்திஸ்தானத்தில் நிறுத்துகை விரோதிக்கும். மேலும், த்வயாதிகாரத்திலும், 'अत्रोपायान्तरस्थाने रक्षको विनिवेशितः' என்று தொடங்கி, பக்தியோகஸ்தானத்திலே ப்ரபத்தி நில்லாநிற்க, ஈஶ்வரன் உபாயாந்தரஸ்தானத்திலே நிற்கையாவது என்' முதலிய ஸ்ரீஸூக்திகளும் விரோதிக்கும். ந்யாஸதிலகத்திலுள்ள 'वेद्यत्वद्रूपभेदो विविध इह स तूपायतान्यानपेक्षा' என்ற ஸ்ரீஸூக்திக்கும் முரணாகிறது.

ஆக, பக்திஸ்தானத்தில் தான் பகவானை நிறுத்தல், ப்ரதிபதோக்த ப்ராயஶ்சித்தஸ்தானத்தில் இல்லை என்றால் இதற்கு பதில் -

மாமேகம் என்றவிடத்தில் ஏகம் என்ற சொல்லுக்கு ஆறு பொருள்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றில் 'सर्वसाध्येष्वभिन्नता' (எல்லா பலங்களுக்காகவும் ஒரே ஸாதனம்) என்ற பொருளைக் கொள்ளும் போது பகவானை உபாயாந்தர ஸ்தானத்தில் நிறுத்துகிறோம். அங்கு தான் 'यद्येन कामकामेन' என்ற ஶ்லோகமும் சொல்லப்பட்டுள்ளது. சரமஶ்லோகத்தின் சுருக்கமான இந்த பொருளில் விரும்பிய பலனின் ஸாதனத்தின் இடத்தில் பகவானை வைத்தல் கூறப்படுகிறது. 'एकैकफललाभाय सर्वलाभाय केशवः' என்பதால் எல்லா பலன்களையும் கொடுக்க பகவான் எல்லா உபாயங்களின் இடத்தில் இருப்பான் என்பது கிடைப்பதால், வேறு உபாயங்களை எதிர்பாராது காக்க வேண்டுவதாகிய பரந்யாஸம் அவஶ்யம் செய்யவேணும் எனத் தெரிகிறது. ஆதலால் ஸ்வரூபம், பலம் போல் பரத்தையும் ஸமர்ப்பிக்க வேண்டும். பரஸமர்ப்பணமாவது எப்படி என் ஸ்வரூபம் உன்னுடையதோ, எப்படி பலனும் உனதோ அப்படியே என்னை காத்தலும் உனதே என மோக்ஷார்த்தப்ரபத்தியில் ரக்ஷாபரம் ஸமர்ப்பிக்கப்படுகிறது. ரக்ஷாபரமென்பது பகவானிடத்தில் அநிஷ்டநிவ்ருத்தியுடன் கூடிய இஷ்டப்ராபகத்வ ப்ரார்த்தனை. இது உபாயாந்தரஸ்தானநிவேஶமல்ல. எப்படி ப்ரதிபதோக்தப்ராயஶ்சித்தங்களுக்கு அந்தந்த பாபங்களைப் போக்கும் தன்மை ஏற்கப்படுகிறதோ, பக்திக்கு ஸஞ்சிதபாபத்தைப் போக்கும் தன்மை 'अग्नौ प्रोतं प्रदूयेत .... सर्वे पाप्मानः प्रदूयन्ते' முதலிய வசனங்களால் ஏற்கப்படுகிறதோ, அப்படியே ப்ரபத்திக்கும்

ப்ராரப்தம் உட்பட எல்லா பாபங்களைப் போக்கும் தன்மை 'साध्यभक्तिस्तु सा हन्त्री प्रारब्धस्यापि भूयसी', 'सर्वपापेभ्यो मोक्षयिष्यामि' முதலிய வசனங்களால் ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஆதலால் தான் இந்த அதிகாரத்திலேயே மோக்ஷயிஷ்யாமி என்கிற சொல்லை விளக்கும்போது இது ஸர்வபாபப்ராயஶ்சித்த-மாதலால் இந்த உபாயத்தால் எல்லா பாபங்களையும் மன்னித்து விடுகிறான் என்று கூறப்பட்டுள்ளது.

உபாயாந்தரஸ்தாநத்தில் நின்று தான் பகவான் காக்கிறான் என்று நிர்பந்தம் இல்லை. அகிஞ்சனனாய் அநந்யகதியாய் பகவானை மஹாவிஶ்வாஸத்துடன் தன்னை ப்ரார்த்திக்கும் அதிகாரிக்கு பகவான் அனுக்ரஹிக்கத் தட்டில்லை. பகவானின் ரக்ஷகத்வம் எல்லோருக்கும் ஒரே விதமாதலால் ப்ரபத்தி அதிகாரியிடம் என்ன விஶேஷம் என்றால், யாகம் முதலிய செய்ததால் ரக்ஷிப்பதற்கும் அதில்லாமலே ரக்ஷிப்பதற்கும் வேறுபாடு உண்டே. ஆனால் அது உபாயாந்தரஸ்தானநிவேஶத்தில் தானே முடிகிறது என்றால், ஏற்றத்தாழ்வு பாராது எல்லோருக்கும் ஶரண்யனாய் அந்தந்த கோரிக்கைக்கு விரோதிகளைப் போக்கவல்லனான பகவான் இப்படி ப்ரார்த்திப்பதனால் மட்டுமே காக்கக் கூடுமாதலால் இதில் வேறுபாடு உண்டு. இப்படி ஏற்காவிட்டால், பாபத்தை உண்டாக்கும் பாபத்தைப் போக்க (पापारम्भकपापनिवृत्त्यर्थं) ஶரணாகதி செய்வது என்பது ஒத்து வராது. வரப் போகிற பாபத்தைப் போக்க ப்ரதிபதோக்த ப்ராயஶ்சித்தம் விதிக்கப் படாததால் அதின் ஸ்தாநத்தில் ப்ரபத்தி கூடாது. ஆனால் ப்ரபத்திக்கு அந்த பாபத்தையும் போக்கும் வல்லமை உள்ளதே.

இன்னும் ஒரு ஸந்தேஹம் - ஏகம் என்கிற பதத்திற்குச் சொல்லப்பட்ட அர்த்தத்தில் 'न च भक्तितः' என்று ஐஹிக, ஆமுஷ்மிகங்களைப் போலே மோக்ஷமாகிய பலத்துக்காகவும் உபாயாந்தரஸ்தானநிவேஶம் சொல்லப் பட்டிருப்பதாலும், பக்தி ப்ராரப்தத்தைப் போக்காததாலும் முன்சொன்ன ஆக்ஷேபத்துக்கு ஸமாதானம் இல்லையே எனில் - ஆம். யாருக்கு பக்தி முதலாமவற்றில் ஜ்ஞானம், ஶக்தி, காலத்தாழ்வைப் பொறுத்தல் ஆகியவை இல்லையோ, அவனுக்கு உபாயாந்தர ஸ்தாநத்தில் பகவான் இருக்கிறான். ப்ரபன்னனுக்குக் காலத்தைக் குறிப்பிடாது ப்ராரப்தகர்மத்தின் முடிவில் தானே மோக்ஷம் என்று ஸமாதானம்.

உண்மையில் ப்ரபத்தி பக்திஸ்தானத்தில் நிற்குமது, ப்ரதிபதோக்த ப்ராயஶ்சித்த ஸ்தானத்தில் நிற்குமது என்று இருவகைப்படும். शरणஶப்தத்தை விவரிக்கும் போது வேண்டிய பலனுக்காக என்று பொதுவாக இருப்பதால் உபாயாந்தரத்தையும் இடை இடாதே என்றது, பக்தியை என்று சொல்லவில்லை.

இவ்வளவாலும் கேட்ட கேள்விக்குப் பதில் வரவில்லையே. 'उपाये गृहरक्षित्रोः .... उपायार्थैकवाचकः', 'त्वमेवोपायभूतो मे भव' முதலியவற்றால் த்வயம், சரமஶ்லோகம் இரண்டிலும் பகவானுக்கு உபாயஶப்தம் சொல்லப்பட்டுள்ளது. இது ஸித்தோபாயத்தைச் சொல்வதன்று. ஸித்தோபாயமான பகவானை உபாயமாக இருக்கப் ப்ரார்த்திப்பதால் யாகம், பக்தி முதலியவற்றின் இடத்தில் இருக்க வேண்டுதல் எனக் கொள்கிறோம். சேதனனான பகவானை அசேதனமான யாகம் முதலியனவாகக் கொள்ளக் கூடாதாகையால். இங்கு த்ருஷ்டிவிதியும் அன்று. ப்ரகரணவிரோதம் வருமாதலால் அசேதனங்களான யாகம் முதலியவற்றிலும் ப்ரஹ்மத்ருஷ்டி எனவும் ஒண்ணாது. ஆகையால் ஸித்தோபாயனான பகவான் ஸாத்யோபாயமான யாகம், பக்தி முதலியவற்றின் ஸ்தானத்தில் இருந்து காக்க வேண்டுதல் என்று முடிவு. அதிலும், தான் விரும்பும் பலத்துக்காக விதித்த உபாயத்தின் இடத்தில் இருந்துதானே தவிர, அதற்கு உபாயமல்லாததின் இடத்திலல்ல. பயனற்றமையால். ஆகையால் ப்ராரப்தத்தைப் போக்கமாட்டாத பக்தியின் இடத்தில் பகவானை வேண்டுவதால் ப்ரபன்னனுக்கு ப்ராரப்தம் எப்படி கழியும்? வேண்டும் பயனைத் தரும் உபாயத்தில் ஸித்தோபாயனை வேண்டினாலல்லவோ இஷ்டம் பலிக்கும்? தவிர, எல்லா அதிகாரிகளும் செய்யும் ரக்ஷண ப்ரார்த்தனத்தையே செய்வதால் பகவானுக்கு ப்ரபந்நனிடம் தனித்த ஆர்வம் இல்லாமல் போகுமே என்றால், சொல்கிறோம்.

இங்கு உபாயாந்தரஸ்தானநிவேஶமாவது உபாயாந்தரத்தை எதிர்பாராது காத்திட வேண்டுதல்.

உபாயமுள்ள இடத்தில் அதில் அஶக்தனுக்கு அதை எதிர்பாராதும், உபாயமில்லாத இடத்தில் அதன் இன்மையினாலேயே அதை எதிர்பாராதும் காக்கிறான். ஆகையால் விரோதமில்லை. எல்லா அதிகாரிகளையும் காக்கும் போது ப்ரபன்னரல்லாதாரிடம் உபாயாந்தரத்தை எதிர்பார்த்தும், அஶக்தனான ப்ரபன்னனிடத்தில் அதை எதிர்பாராதும் காக்கிறான். எதிர்பார்ப்பின்மையும் உபாயத்தின் இருப்பு, இன்மையை ஒட்டி இருவகையாதலால் விரோதமில்லை.

இதனால் 'यद्येन कामकामेन' என்றபடி 'न्यासेनैव' என்று ஆறாவது பொருளில் மட்டும் தான் பகவானை உபாயாந்தரஸ்தாநத்தில் நிறுத்துதல், மற்ற பொருட்களில் அது இல்லை என்று चोदितமான அஸ்வாரஸ்யமும், எங்கும் ஸ்தானநிவேஶம் ஒப்புக் கொள்வதால் மறுக்கப்பட்டது. 'त्वमेवोपायभूतो मे भव' என்ற உபாயாந்தரஸ்தாநநிவேஶ மாகிற பரந்யாஸம் ஶரணாகதிக்கு முக்கியமாதலால் அதில்லாவிடில் ஶரணாகதி ஸ்வரூபமே ஸித்திக்காது.

'यद्येन कामकामेन' என்ற ஆறாவது பொருள் த்ரைவர்கிக பலங்களை வேண்டுபவர்க்கும் ஶரணாகதி அவஶ்யம், மோக்ஷார்த்திகளுக்கு மட்டுமல்ல என்று தெரிவிக்கிறது. அதனால் தான் தர்மார்த்தகாமங்களை அபேக்ஷிப்பார்க்கும் ஶரணாகதி ஸாதனம் என்று முடித்தது. எல்லாவிடத்திலும் உபாயாந்தரத்தை எதிர்பாராது காத்தலை ஏற்பதால் பரந்யாஸம் செய்ய வேண்டும் போது ப்ராரப்தபாபத்தில் இசைந்த பகுதி தவிர மற்றுள்ளதில் ப்ரதிபதோக்தப்ராயஶ்சித்தமாகிற உபாயமும், ஸஞ்சித பாபத்தில் பக்தியாகிற உபாயமும், ப்ரஸித்தமாதலால் இவ்விரண்டையும் எதிர்பாராது காக்க வேண்டும் என்கிற பரந்யாஸத்துக்கு உபாயத்தின் இருப்பு, இன்மையை ஒட்டி இருவகையாலும் விரோதமில்லை. விஶிஷ்டவஸ்துவின் இன்மையை ஒப்புக் கொள்ள விஶேஷ்யமோ அல்லது விஶேஷணமோ மட்டுமே இருக்கும் போது மற்றது இல்லாததே அமையும் என்பது போல் இங்கும் உபாயாந்தரத்தின் எதிர்பார்ப்பின்மையின் இருப்பு, இன்மையே அமையும்.

ஆகிலும் 'सर्वपापेभ्यो मोक्षयिष्यामि' என்பதால் ப்ரபத்தி பாபப்ராயஶ்சித்தம் என்று ஏற்படும். ஆனால் இல்லாத பலனை உண்டாக்குதல் கூடாதே. விதித்த உபாயத்தைச் செய்தால் ப்ரபத்தியால் அதற்குத் தடைகள் நீங்கிப் பலன் கிடைக்கிறது அன்றோ? என்னவும் ஒண்ணாது. இங்கு ஸம்ஸாரம் நீங்குதலே பலன். 'यथा न क्रियते ज्योत्स्ना' முதலிய வசனங்களால் ஆவிர்ப்பாவம் தானாக ஏற்படும். ஆனால் யாகம் முதலியவற்றால் ஸ்வர்க்கம் முதலியன கிடைப்பது எப்படி? யாகம் முதலியன ஸ்வர்க்கம் முதலியதுக்கு நேர் உபாயம். ப்ரபத்தி அப்படி அல்லவே. தடை நீங்குதல் தானே ப்ரபத்தியின் பலம்? தடை நீங்குவதே ஸ்வர்கம் முதலியதும் அல்லவே எனில், பக்தி கூட 'तद्यथा इषीकतूलमग्नौ प्रोतं प्रदूयेत' என்று பாபப்ராயஶ்சித்தமாகச் சொல்லப்பட்டிருப்பதால் அபூர்வபலஸாதனமாகாமல் போய் விடும். பக்திக்கு அபூர்வபலஸாதனத்வம் 'आर्तो जिज्ञासुरर्थार्थी' என்று கீதையில் நான்கு விதமானவர்க்கும் ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறதெனில், அதன் இடத்தில் ப்ரபத்தியை விதித்து இருப்பதால் இங்கும் அபூர்வபலஸாதனத்வம் கூடும். 'यद्येन कामकामेन' என்ற ப்ரமாணத்தாலும் ப்ரபத்தி நேராகவே எல்லா பலங்களையும் கொடுக்க வல்லது. பாபநிவ்ருத்தியின் மூலம் பலஸாதனமாதல் உபலக்ஷணம் (எடுத்துக்காட்டு.) பாபநிவ்ருத்தியாகிற பலன் எப்படி ப்ரபத்தியால் கிட்டுமோ அப்படியே எல்லா பலன்களின் ஸித்தியும் என்று உணர்த்தப்படுகிறது. பக்திக்கு அங்கமாக ப்ரபத்தி பண்ணும் போது பக்தி வளராமல் தடுக்கும் விரோதிபாபத்தைப் போக்குவது போல் எல்லா பாபங்களையும் போக்கக் கோரினால் ஸர்வபாபநிவ்ருத்தியையும் உண்டாக்கும் என்பது போல் அறிவது.

இங்கு சிலர் உபாயாந்தரஸ்தானநிவேஶவிஷயத்தில் இவ்வாறு கூறுகின்றனர் - பகவானை பக்திஸ்தானத்தில் வைக்கவில்லை. பக்தியாகிற உபாயஸ்தான த்தில் வைக்கிறோம். பக்தியின் உபாயத்வமாவது தததிகமம் தொடங்கி, அந்திமஸ்ம்ருதி வரை நாளுக்கு நாள் வளர்ந்து வருமது. அதன் உடன் பிறகே (अव्यवहितोत्तरं) ப்ராரப்தம் கழிந்து மோக்ஷம் வருவதால் அது தான் மோக்ஷோபாயம்.

அந்த பக்தியானது அந்த ஸமயத்தில் உள்ள எல்லா பாபங்களுக்கும் ப்ராயஶ்சித்தம். ப்ரபத்தியும் அப்படி தானே. (ஆனால் ப்ரபத்தியில் ப்ராரப்தமும் சேர்ந்திருக்கும், பக்தியில் அது இல்லை). ஸர்வபாபப்ராயஶ்சித்தம் என்பதில் விவாதம் இல்லாததால் அப்படிப்பட்ட பக்தியின் ஸ்தானத்தில் பகவானை வைக்கலாமே. பரபக்தி, பரஜ்ஞாந, பரமபக்திகளில் பரபக்திஸ்தானத்தில் ப்ரபத்தியைச் சொல்லியிருப்பதால் அந்திமஸ்ம்ருதிக்கு முதல் க்ஷணத்தில் உள்ள பக்தியின் ஸ்தானத்தில் அல்லவே என்று. இதுவும் சரியல்ல. இங்கும் ஆர்த்தப்ரபத்தி மட்டும் ஏற்கப்படும். த்ருப்தப்ரபத்தி விடப்படும். பக்தி எல்லா பாபங்களுக்கும் ப்ராயஶ்சித்தமாகையால் அப்படிப்பட்ட பலஸாதனமான பக்திஸ்தானத்தில் பகவானை வைத்தல் என வேண்டும். த்ருப்தப்ரபன்னனுக்கு ப்ராரப்தத்தில் ஒப்புக் கொண்ட பாபம் உண்டு என்பதால் பக்தி அவனுக்கு வேண்டிய பலஸாதனம் ஆகாது. அதாவது, முதலில் பக்தி ப்ராரப்தத்தைப் போக்காது என்பதால் வேண்டிய பலஸாதனம் அல்ல என்றோம். இப்போது எல்லா பாபங்களையும் போக்குமானால் தானிசைந்த பாபத்தைத் தவிர மற்றதைப் போக்கும் ஶக்தி இல்லை என்கிறோம், அந்த அம்ஶமும் கழிய வேண்டுகையால். வசனபலத்தால் வேண்டியபடி பாபத்தைக் கழிக்கும் என்னில், வசனத்தால் ஸர்வப்ராயஶ்சித்தமாகவே இசையலாமே, நடுவே ஏன் உபாயாந்தரத்தை வைக்க? மற்றும் அந்திமஸ்ம்ருதியை எல்லையாக உடைய பக்தியையே உபாயமாகக் கொள்ளில் அப்போது ப்ராரப்தமும் அநுபவித்து கழிந்து விட்டபடியால் 'अनारब्धकार्ये एव तु पूर्वे तदवधेः' என்கிற அதிகரணமே எழாது. பக்தி ப்ராரப்தத்தையும் போக்குமா, அதைத் தவிர மற்றதைத் தான் போக்குமா என்று விசாரித்து ப்ராரப்தம் தவிர்ந்ததையே போக்குகிறது என்றல்லவோ அந்த அதிகரணத்தில் ஸ்தாபிக்கப் படுகிறது.

இப்படி அனேகவிதமான ஆக்ஷேபங்களும் அவற்றுக்கு ஸமாதானங்களும் ஒவ்வொரு இடத்திலும் இருக்கின்றன என்று தெளிவு.

आतिवाहिकाधिकरणத்தில் (ப. 632-634) நம் ஸ்வாமி ஒரு அழகிய சித்தரிப்பு போல (ரன்னிங் காமென்டரி) முக்தன் பரமபதம் செல்லும் ப்ரகாரத்தை வர்ணித்திருக்கிறார். கௌஷீதகீ உபநிஷத், ப்ரஹ்மஸூத்ரங்கள், ஸ்ரீவைகுண்ட கத்யம், ந்யாயஸித்தாஞ்ஜநம், ரஹஸ்யத்ரயஸாரம் இவ்வெல்லா க்ரந்தங்களில் விசாரிக்கப்பட்ட விஷயங்களை ஒருங்கிணைத்து மிக நேர்த்தியாக (தத்ரூபமாக) ஸங்க்ரஹித்திருக்கிறார்.

பல ஸூக்ஷ்மமும், அபூர்வமுமான விஷயங்களைப் பொதிந்து கொண்டு உயர்ந்து விளங்குகிறது ஸ்ரீபாஷ்யபாவசந்த்ரிகா. ஶக்தி மற்றும் ஸமயத்தின் இன்மையால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

रमानरहरेः सान्द्रकृपया परया सदा । सदाचार्यवरा ह्येते जीवन्तु शरदां शतम् ॥

अनुगृह्णन्तु दासान् नः आशीर्भिरनुपाधिकैः । अध्यात्मग्रन्थरत्नैश्चाप्यवबोधनतत्परैः ॥

ஶுபமஸ்து.